**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | நாடகமும் அரங்கியலும் – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

01) "சமூகத்தின் கண்ணாடியே நாடகம்" எனக் கூறியவர்
(1) அபிநய குப்தர் (2) பரத முனிவர் (3) ரூசோ
(4) பேனாட்ஷா (5) அலடைஸ் நிக்கொல் (.......)

02) நாடகம் ஒன்றில் குரல் பாடல், சொல்லாடல் மூலம் கருத்தைப் புலப்படுத்துவது
(1) ஆங்கிக அபிநயம் (2) ஸ்தாயிராவ அபிநயம் (3) வாச்சிகா அபிநயம்
(4) ஆஹார்யா அபிநயம் (5) சாத்வீகா அபிநயம் (.......)

03) "மூன்றின் ஒருங்கியைபு" என மேலைத்தேய அரங்க மரபில் கருதப்படுவது
(1) காலம், வெளி, நடிகன்
(2) கதைப்பின்னல், கரு, செயற்பாடு
(3) காலம், இடம், செயல்
(4) ஆரம்பம், முடிவு, உச்சம்
(5) கரு, உச்சம், அவலம் (.......)

04) பரத நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் ரசங்களின் எண்ணிக்கை
(1) 04 (2) 08 (3) 09 (4) 10 (5) 07 (.......)

05) பரதரின் "ரச"க் கோட்பாட்டைக் கூறும் அரங்க மரபு
(1) யப்பானிய மரபு (2) கிறிஸ்தவ மரபு
(3) சமஸ்கிருத மரபு (4) சிங்கள மரபு
(5) எலிசபெத் நாடக மரபு (.......)

06) நடிப்பு முறைமைக் கோட்பாட்டிற்கு உரியவர்
(1) பேனாட்ஷா (2) பெடோல் பிறைக்ற் (3) இப்சன்
(4) ஸ்ரனிஸ்ல வஸ்கி (5) ஒகஸ்தாப் போல் (.......)

07) சமஸ்கிருத நாடக மரபில் கதாநாயகனின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமா? இல்லையா எனும் ஆவல் மேலிடும் அந்தர நிலையைக் குறிப்பது
(1) ஆரம்ப (2) பிரயத்தன (3) பிராப்தியாய
(4) நியாதாப்தி (5) பலாகம (.......)

08) கபுக்கி ஆற்றுகை வடிவம் நிகழ்த்தப்படும் நாடு
(1) யப்பான் (2) சீனா (3) அமெரிக்கா
(4) இலங்கை (5) இந்தியா (.......)

09) நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் அரங்க வகைகள் எத்தனை?
(1) 04 (2) 03 (3) 08 (4) 05 (5) 06 (.......)

10) பரதரின் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் எட்டுவித பாவங்களில் ''ஸ்வர பங்க'' குறிப்பது
(1) குரல் மாற்றம் (2) வியர்த்தல் (3) கண்ணீர் சொரிதல்
(4) மயக்கம் (5) மயிர்க்கூச்செறிதல் ( .......)

11) அரிஸ்ரோட்டல் வாழ்ந்த காலப்பகுதி
(1) கி. மு. 4 ஆம் நூற்றாண்டு
(2) கி. மு. 6 ஆம் நூற்றாண்டு
(3) கி. மு. 8 ஆம் நூற்றாண்டு
(4) கி. மு. 10 ஆம் நூற்றாண்டு
(5) கி. மு. 11 ஆம் நூற்றாண்டு ( .......)

12) ''நாடக பாடத்தில் தரப்பட்டுள்ள ஒரு பாத்திரத்தைப் பயன்படுத்தி அதிலுள்ள நடிகர்களால் அளிக்கை வெளி ஒன்றில் வகிபாகம் ஒன்றினை மீளுருவாக்கம் செய்யும் செயன்முறையே ''சித்தரிப்பு'' ஆகும் எனக் கூறியவர்
(1) பெடோல் பிறைக்ற் (2) மேயர் கோல்ட் (3) குறொட்டொ வஸ்கி
(4) ஸ்ரனிஸ்லவஸ்கி (5) ஒகஸ்தா போல் ( .......)

13) சமஸ்கிருத நாடகம் ஒன்றின் கதைப்பின்னலின் ஐந்து பகுதிகளில் ''பிரகரி'' குறிப்பது
(1) தலைவனின் விருப்பத்துக்காகப் பாடுபடுவதாக கற்பனை செய்வது
(2) கதாநாயகன் தன் குறிக்கோளை அடையும் பயணத்தில் எதிர்கொள்ளும் தடைகள்
(3) தலைவன் தலைவியுடன் இணையும் செயற்பாடு
(4) தலைவன் தலைவியை காணுதல்
(5) தலைவனும் தலைவியும் பிரியும் செயற்பாடு ( .......)

14) கி. பி. 1600 களில் இத்தாலியில் மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய ஒரு நாடக வடிவம்
(1) நோ (2) புன்ராக்கு (3) ஒப்பேறா (4) கபுக்கி (5) பலே ( .......)

15) நாடகக் கலையின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைவது
(1) சமயகரண சடங்குகளாகும்.
(2) குழந்தைகளின் இயல்பான செயற்பாடுகளாகும்.
(3) பொழுதுபோக்கு நடவடிக்கைகளாகும்.
(4) ஆதிகால வேட்டுவ செயற்பாடுகளாகும்.
(5) தொழில்முறை ஆடல்களாகும். ( .......)

16) சூனியம் பிசாசு காரணமாக ஏற்படும் துன்பங்களை நீக்குவதற்காக செய்யப்படும் சாந்திரச் சடங்கு
(1) ரட்டயக்கும (2) தெவொல் மடுவ (3) ரித்தி சடங்கு
(4) சூனியம் சடங்கு (5) சன்னியக்கும ( .......)

17) திரௌபதை அம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு வடிவம்
(1) பாண்டவர் வனவாசம் (2) கம்சன் போர் (3) குளுத்திச் சடங்கு
(4) வேட்டைத் திருவிழா (5) காமன் கூத்து ( .......)

18) மகா சம்மத்த அரசியின் மசக்கையைத் தணிப்பதற்காக நடிக்கப்பட்ட நாட்டார் நாடகம்
(1) சொக்கரி (2) கோலம் (3) நாடகம
(4) ரித்தியாகய (5) ரட்டயக்கும ( .......)

19) ''மாயாவதி'' என்ற நாடகத்தின் ஆசிரியர்
(1) சாள்ஸ் டயஸ் (2) எல். பியசேன
(3) ஏ. எம். தசில்வ (4) எஸ். பி. எஸ் பர்னாந்து
(5) சாள்ஸ் அபேசேக்கர ( .......)

20) மனமே நாடகம் தயாரிக்கப்பட்ட ஆண்டு
(1) 1956 (2) 1958 (3) 1960 (4) 1976 (5) 1986 ( .......)

21) சங்கமருவிய காலப்பகுதியில் வேந்தர்கள் முன் ஆடப்பட்ட ஆடல்
(1) வேத்தியல் (2) பொதுவியல் (3) குரவை கூத்து
(4) வேட்டுவவரி (5) களவேள்வி ( .......)

22) "புலசந்தோர்" எனும் பாத்திரம் இடம் பெறும் வடிவம்
(1) வசாப்பு (2) காமன்கூத்து (3) தென்மோடி
(4) வடமோடி (5) துருச்சுனன் தபசு ( .......)

23) "தானாயம்பல" என்னும் அரங்க வெளியில் நிகழ்த்தல் பெறும் ஆற்றுகை வடிவம்
(1) கோலம் (2) நாடகம் (3) நூர்த்தி
(4) சொக்கரி (5) ரட்டயகும ( .......)

24) ஈழத்திலே கூத்தினை புத்தாக்க முறையில் மீட்டெடுத்தவர்
(1) பேராசிரியர். சு. வித்தியானந்தன்
(2) பேராசிரியிர். சி. மௌனகுரு
(3) கலையரசு சொர்ணலிங்கம்
(4) பம்மல் சம்பந்த முதலியார்
(5) சங்கரதாஸ் சுவாமிகள் ( .......)

25) "அரங்கவியல்" என்னும் நூலின் ஆசிரியர்
(1) பேராசிரியர். சி. மௌனகுரு
(2) பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை
(3) நா. சுந்தரலிங்கம்
(4) இ. முருகையன்
(5) பேராசிரியர். சு. வித்தியானந்தன் ( .......)

26) ரட்டயக்கும என்னும் சடங்கின் பிரதான நோக்கம்
(1) குழந்தை வரம் வேண்டல் (2) சிறந்த கணவரைப் பெறல்
(3) பயிர் வளம் வேண்டல் (4) பயிர் வளம் வேண்டல்
(5) பேய்களை விரட்டிவிடுதல் ( .......)

27) அரிஸ்ரோட்டல் குறிப்பிடும் "ஹாமாசியா" என்பது
(1) அவலப் பிழை (2) உணர்ச்சி வெளிப்பாடு
(3) மகிழ்வான மனநிலை (4) சாந்தமான மனநிலை
(5) கழிவிரக்கத் தன்மை ( .......)

28) "பொன்னர் சங்கர்" ஆற்றுகை நிகழ்த்தப்படும் பிரதேசம்
(1) மட்டக்களப்பு (2) மலையகம் (3) மன்னார்
(4) யாழ்ப்பாணம் (5) முல்லைத்தீவு ( .......)

29) "மொஸ்கோ" கலை அரங்கினை நிறுவியவர்
(1) ஸ்ரனிஸ்ல வஸ்கி (2) மேயர் கோல்ட் (3) பெடோல் பிரைக்ட்
(4) அரிஸ்ரோட்டல் (5) குஹாட்டவஸ்கி ( .......)

30) ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கின் ஆசிரியர்
(1) சாமுவேல் பெக்கட் (2) அன்ரோனியோ ஆர்த்தோ
(3) அகஸ்தா போல் (4) மேயர் கோல்ட்
(5) அன்ரன் செக்கோவ் ( .......)

31) நடிகன் இன்றி நாடகம் இல்லை. நாடகத்திற்கு மிக முக்கியமானது
(1) காட்சி (2) உரையாடல் (3) முரண் (4) நடிப்பு (5) மேடை ( .......)

32) ஆற்றுகைக் கலைகள் என்று கூறப்படுவனவற்றில் பொதுவாக இடம்பெறாத வடிவம்
(1) நடனம் (2) நாடகம் (3) பாடல் (4) ஓவியம் (5) சிலம்படி ( .......)

33) பெண் பாத்திரங்களைப் பெண்களே தாங்கி நடிக்கும் புராதன செந்நெறி மரபு
(1) கிரேக்க நாடக மரபு
(2) சமஸ்கிருத நாடக மரபு
(3) எலிசபெத் கால நாடக மரபு
(4) யப்பானிய நாடக மரபு
(5) மத்திய கால நாடக மரபு (.......)

34) ஆந்திரா பிரதேசத்தின் பாரம்பரிய நாடகத்தின் பெயர்
(1) யக்ஷகானம் (2) குச்சுப்புடி (3) பகவத மேளம்
(4) நௌதாங்கி (5) கூடி ஆட்டம் (.......)

35) தனஞ்செயரால் எழுதப்பட்ட நாடகம் சார்ந்த இலக்கண நூல்
(1) தச ரூபகம் (2) தொல்காப்பியம் (3) நாட்டிய சாஸ்திரம்
(4) நாடக இலக்கணம் (5) கவிதையியல் (.......)


(அ)


(ஆ)


(இ)


(ஈ)


(உ)

36) படம் (அ) இல் காணப்படுபவர்
(1) சூத்திரகர் (2) ஸ்ரீஹர்சர் (3) பாசர்
(4) காளிதாசர் (5) கதாஸ்கர் (.......)

37) படம் (ஆ) இல் காணப்படும் நாடக ஆசிரியர்
(1) மேயர் ஹால்ட் (2) அகஸ்தாபோல் (3) ஸ்ரனிஸ்ல வஸ்கி
(4) பெடோல் பிறைக்ற் (5) குறொட்டவஸ்கி (.......)

38) படம் (இ) இல் காணப்படும் நாடக ஆசிரியர்
(1) வில்லியம் ஷேக்ஸ்பியர் (2) பேணாட்சோ
(3) அன்ரன் செக்கோவ் (4) ஹென்றி இப்சன்
(5) பெடோல் பிறைக்ற் (.......)

39) படம் (ஈ) இல் உள்ள அரங்கு குறிப்பது
(1) குளொப் அரங்கு (2) யப்பானிய நோ அரங்கு
(3) சதுஸ்ர அரங்கு (4) கூத்தம்பலம்
(5) வட்டக்களரி (.......)

40) படம் (உ) இல் காட்டப்பட்டுள்ள வேடதாரி
(1) கபுக்கியில் வருவது (2) நோ (*Noh*) வில் வருவது
(3) புனறக்குவில் வருவது (4) கதகளியில் வருவது
(5) கோலத்தில் வருவது (.......)

## பகுதி - II

❖ பகுதி - II இல் பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு - A

01) i) கலை என்றால் என்ன? (2 புள்ளி)

ii) கலையின் இரு பெரும் பிரிவுகளை கூறி உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளி)

iii) ஆற்றுகை கலை வடிவமான நாடகத்தின் சிறப்பியல்புகளை கூறி விளக்குக. (8 புள்ளி)

02) i) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் மும்மைக் கோட்பாடுகளைக் கூறுக. (2 புள்ளி)

ii) அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் "கதாசிஸ்" பற்றிய கொள்கையை விளக்குக. (5 புள்ளி)

iii) கவிதையியல் என்னும் நூலில் அரிஸ்ரோட்டில் முன்வைத்துள்ள அவல இலக்கண உறுப்புக்களை கூறி விளக்குக. (8 புள்ளி)

03) i) சடங்கு என்றால் என்ன? (2 புள்ளி)

ii) உமக்கு தெரிந்த சமய கரண சடங்குகளை குறிப்பிடுக. (4 புள்ளி)

iii) சடங்கிலிருந்து நாடகம் உருவான படிமுறைகளைக் கூறி விளக்குக. (9 புள்ளி)

### பிரிவு - B

04) i) முறைமைக் கோட்பாட்டினை முன்வைத்தவர் யார்? (2 புள்ளி)

ii) ஸ்ரனிஸ்லவஸ்கியினால் நிறுவப்பட்ட கலை அரங்கினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

iii) நடிகன் சிருஸ்டித்துவமான நடிப்பினை மேற்கொள்வதற்கு ஸ்ரனிஸ்ல வஸ்கி அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட உளவியல் நுட்ப முறைகள் பத்தினையும் கூறி விளக்குக. (10 புள்ளி)

05) i) அபிநயம் என்றால் என்ன? (2 புள்ளி)

ii) நான்கு வகையான அபிநயங்களினையும் கூறி அவை நாடகத்திற்கு செய்யும் பங்களிப்பினை விபரிக்குக. (6 புள்ளி)

iii) பரத நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் நாட்டிய தர்மி, லோக தர்மியின் இயல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

06) பின்வரும் அரங்க வடிவங்கள் பற்றிக் குறிப்புக்கள் வரைக.

i) ரட்ட யக்கும

ii) காமன் கூத்து

iii) கோலம்

iv) பாஸ்க்கா

v) பலே ($3 \times 5 = 15$ புள்ளி)